# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி D.A.ஜோசப், பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

பெரியாழ்வார் அசல் பிராம்மணர். அவருடைய தேவிகளும், அவர் வளர்த்த ஆண்டாள் என்ற கோதையும் பிராம்மணப் பெண்டிரே. ஆனால் சூடிக் கொடுத்த சுடர்க் கொடி ஆகிய அந்த நாச்சியார் தன்னை ஆயர் குலப் பெண்ணாகச் சொல்லிக் கொள்கிறாள். சீர்மல்கும் ஆயப்பாடிச் செல்வச் சிறுமியரில் தானும் ஒருத்தி என்பது அவள் பிரகடனம். அவளுடைய உடை பேச்சு, கொண்டை அனைத்தும் அவளை ஒரு இடைச்சாதிப் பெண்ணாகத்தான் காட்டுகின்றன. அவளுடைய பாசுரங்களில் தயிரும் மோரும் பாலும் வெண்ணெயையும், நெய்யும் மாறி மாறி மணம் வீசுகின்றன.

'கீசுகீசு' என்ற பாசுரம் படிக்கும்போது நம் முதுகுக்குப் பின்னால் இருந்து தயிர் கடையும் சத்தம் பலமாகவே கேட்கிறது. 'கனத்திளங் கற்றெருமை' பாசுரம் படிக்கும்போது நம் மூக்கில் மாட்டுச் சாணம் வாசைன வீசுகிறது. கண்ணன் யாதவன் என்பதற்காக தன் பிராம்மண வர்ணத்தை வீசி எறிந்துவிட்டு தான் ஒரு இடைச்சியாகி அந்த நாராயண நம்பியை கைத்தலம் பற்றினாள். அது ஒரு காதல் திருமணம் கலப்புத் திருமணம்.

ஆனால் அந்தக் கலப்புத் திருமணத்தால் யாருக்கும் எந்தப் பிரச்சனையும் ஏற்படவில்லை. பெற்றோர் மனம் உவக்க, மற்றோர் முகம் வியக்க அந்தத் திருமணம் வெற்றிகரமாக ஸ்ரீரங்கத்தில் நிறைவேறியது. அன்றும் இன்றும் இந்தத் திருமணத்தை குறைகூற யாரும் இல்லை.

ஆனால் இன்று காதல் கல்யாணங்களும் கலப்புத் திருமணங்களும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு போகின்றன. அவற்றால் பலவிதமான பிரச்சனைகளும் கூடிக் கொண்டே போகின்றன. சாதியை ஒழிக்கிறோம் என்கிறார்கள் சிலர், சமத்துவம் கொணர்கிறோம் என்கிறார்கள் சிலர். நம் சமுதாயத்தில் திருமணங்கள் பெரியவர்களால் இப்படி இப்படி இருக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டன. அதற்குக் காரணங்கள் உண்டு. தினம் ஒரு கோழி விழுங்குபவன், அசைவத்தைக் கண்டாலே அஞ்சி ஓடும் ஒரு பெண்ணோடு எவ்வளவு காலம் சந்தோஷமாக வாழ்ந்துவிட முடியும்? ஹோட்டலில் சாப்பிடுபவர்கள் கூட டிபன் சாப்பிடுகிறவர்கள் என்றும், மதிய உணவு அருந்துகிறவர்கள் என்றும் இரண்டாக பிரிக்கப்படுகிறார்கள்— பரிமாறும் வசதிக்காக. வாழ்வெல்லாம் ஒன்றாய் வாழ வேண்டிய நிர்பந்தம் உள்ள தம்பதியர் ஒத்த குணமுள்ளவர்களாக, பழக்கங்கள் உள்ளவர்களாக இருந்தால் அந்த வாழ்வு இனிக்கும். மீன்பிடிக்கும் பெண்ணுக்கும் கோவில் அர்ச்சகருக்கும் ஒத்துப் போகுமா?

கசாப்பு கடைக்காரனுக்கும், ஓதுவார் மகளுக்கும் சரிப்பட்டு வருமா? பரம்பரை பரம்பரையாக சில பழக்கங்கள், சில படிப்புகள், சில பண்புகள், ஒவ்வொரு குடும்பத்திலும் நிலவுகின்றன. அந்தக் குடும்பங்கள் சீர் குலையாமல் ஒற்றுமையாக வாழ அது முக்ய காரணம். ஒரு பஸ்ஸில் ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் மிடுக்குடன் உடை உடுத்தி பயணிக்கும் போது 10 நாள் குளிக்காத ஒரு குடிகாரன் அவர்கள் மத்தியில் வந்து அமர்ந்தால் அவர்களுக்கு எப்படி இருக்கும்? அவனுக்கும் அவர்களுக்கும் அந்தப் பயணம் எப்படி இனிப்பாக இருக்கும்? அதுபோல ஒரு குறிப்பிட்ட விதமான வாழ்க்கைக்குப் பழகிப் போன ஒரு குடும்பத்தில் அதற்கு முற்றிலும் மாறான வாழ்க்கைமுறை கொண்ட நபர் காதல் திருமணம் என்ற பெயரால் உள்ளே நுழையும் போது அந்த குடும்பத்தின் சமச்சீர்நிலை பாதிக்கப்படுகிறது.

பாரம்பரிய திருமணங்களில் கூட சில குண பேதங்களால் வாழ்க்கை சிதறிப் போகிறது. அப்படி இருக்கும் போது வம்சாவளி நெறிகளுக்குக் கட்டுப்படாமல் வெவ்வேறு திசையில் இயங்கிக் கொண்டிருக்கும் குணங்கள் உடையவர்கள் ஒன்று சேர்ந்தால் அங்கே விரிசல் விழாமல் இருக்குமா? இளமைத் துடிப்பில் கலப்புத் திருமணம் செய்கிறவர்கள் அதனால் தம் பெற்றோருக்கு எவ்வளவு பெரிய அதிர்ச்சியைத் தருகிறார்கள்! தெரு முனையில் ஒரு ஆண்நாயும் ஒரு பெண்நாயும் சந்திக்கின்றன; மோஹம் கொள்கின்றன, உடலால் இணைகின்றன. இந்த நாய்களுக்கு பெற்றோரின் அனுமதியை கேட்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் அதனால் ஆகப் போவது ஒன்றும் இல்லை. ஒரு இளைஞனும் பருவப்பெண்ணும் சந்தித்து தம் மனதிற்கு பிடிக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக எந்த பராம்பரிய விதிமுறைக்கும் கட்டுப்படாமல் திருமணம் செய்து கொள்கிறார்கள். அந்த நாய்களுக்கும் இவர்களுக்கும் என்ன வேறுபாடு?

காதல் இன்பத்தைக் கூட ஒரு கட்டுப்பாட்டோடு அநுபவிக்க வேண்டும் என்பது நம் முன்னோர்களுடைய ஆணை. ஏனென்றால் திருமண வாழ்வு என்பது பல சட்டங்களுக்கு உட்பட்டது. தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், உறவினர் இன்னும் பலருக்கு இல்லறத்தான் கடமைப் பட்டிருக்கிறான். இறந்துபோன முன்னோர்களுக்கு இவன் செய்ய வேண்டிய ஆன்மீகக் கடமைகள் ஏராளம். வைதீகச் சடங்குகளில் கூட சில மந்திரங்கள் சொல்வதற்குக் கலப்புத் திருமணம் தடையாய் இருக்கிறது. இதையெல்லாம் மறந்து கண்போன போக்கிலே கல்யாணம் என்ற கொள்கைப்படி இன்றைய சமுதாயம் போய் கொண்டிருக்கிறது. அதை உற்சாகப்படுத்த ஒரு அரசாங்கம், ஒரு போலீஸ் ஸ்டேஷன், மற்றும் சினிமா, சிறுகதைகள் இப்படி பலப்பல!

சிங்கத்துக்கு சிங்கம் பிறக்க வேண்டும். அந்த பரம்பரையிலே சிங்கங்கள் சிங்கங்களாகவே இருக்க வேண்டும். திடீரென்று இடையில் அந்த வம்சத்தில் ஒரு ஓநாய்க் குட்டி பிறந்தால் இது எவ்வளவு பெரிய அவலம்? இந்த கொள்கையை நம் முன்னோர்கள் ஸ்திரமாகக் கடைப்பிடித்தத னால் பிராம்மண குடும்பங்களில் தெய்வங்களை வசப்படுத்தும் மஹான்கள்

தோன்றினார்கள். க்ஷத்ரிய குடும்பங்களில் வீரத்திறனும் விவேகத்திலும் குறைவில்லாத சக்ரவர்த்திகள் தோன்றி இந்தியாவை உலகின் முன்னணி நாடாக வைத்திருந்தார்கள். வைசியர்களில் பணத்தைப் பெருக்கும் குபேரர்கள் இருந்தார்கள். இந்த நாட்டில் இருந்த வைரங்கள், தங்கக் குவியல்கள் நவரத்தின மலைகள் அனைத்திற்கும் அவர்கள் தான் காரணம். அடுத்து வேளாளர்கள், பஞ்சமென்றால் என்னவென்றே தெரியாதபடி இந்த நாட்டை வளர்த்து வந்தார்கள்.

ஆனால் இன்று எதுவுமே உருப்படி இல்லை. சாம்பாரில் கொஞ்சம், ரசத்தில் கொஞ்சம், வடையில் கொஞ்சம், பாயஸத்தில் கொஞ்சம் என்று அனைத்தையும் எடுத்து குழப்பி அதை உணவென்று பரிமாறினால் அதை யார் உண்ணுவார்? பிச்சைக்காரன் வாந்தி எடுத்ததுபோல இன்றைய சமுதாயத்தின் எந்தச் சிறப்பும் முழுமையாக இல்லை. நம் முன்னோர்களின் மேன்மைச் சாதனைகள், உயர்ந்த குடும்பங்கள், நோயில்லா உடல்கள், கள்ளமில்லா உறவுகள், தெய்வீக சித்துக்கள் எல்லாம் எங்கே? கலப்பு என்று கலக்கத் தொடங்குகிறவர்கள் பரம்பரை கலப்படத்தின் எல்லையை தொடுகிறது. ஒரு தமிழச்சியும் மஹாராஷ்டிரனும் திருமணம் செய்து கொண்டால் அது அதோடு நின்றால் பரவாயில்லை. அடுத்தடுத்த தலைமுறைகளில் ஒரு இந்தியனும் அமெரிக்கப் பெண்ணும் என்கிற அளவில் போய் முடிகிறது. இப்படி உருவாகிற சமுதாயத்துக்கு இந்தியா மீது தேசபக்தி எப்படி ஏற்படும்? மெல்ல மெல்ல நம் நாட்டுக்கும் நம்மதத்துக்கும், நம் பண்பாட்டுக்கும் நாம் வைக்கும் வேட்டுதான் இந்த கலப்புத் திருமணம். எனவே தாழி உடையும் முன்னே வெண்ணெயை காப்போம்.